# யாழ். இலக்கிய வட்டம்
# இரு தசாப்தங்கள்:
# சில நினைவுகள்

யாழ்வாணன்

யாழ்.
இலக்கிய வட்டம்
யாழ்ப்பாணம்.

யாழ். இலக்கியவட்டப் பணிகள் சிறக்க
எமது வாழ்த்துக்கள்!

- பாணிப் பனாட்டு
- பனம் சிரப்
- பனம் பானம்
- பனம் கோடியல்
- பனம் ஜாம்
- அழகிய கைப்பணி,
அழகுசாதனப் பொருட்கள்

கற்பகம் விற்பனை நிலையங்களை நாடுங்கள்!

பனம் பொருள் அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23801, 22094

அ. யேசுராசா
தந்தது

# யாழ் இலக்கிய வட்டம்

## இரு தசாப்தங்கள் :
## சில நினைவுகள்

யாழ்வாணன்

யாழ்

நூலின் பெயர் : யாழ். இலக்கிய வட்டம்
இரு தசாப்தங்கள் ;
சில நினைவுகள்

நூலாசிரியர் : யாழ்வாணன்

முகவரி : 56/1, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

உரிமை : திருமதி. ச. தபோநிதி
56/1, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்

பதிப்பு : முப்பத்திரண்டாவது

வெளியீடு : யாழ். இலக்கிய வட்டம்,
மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.

விலை : ரூபா 10

விடயம் : யாழ். இலக்கிய வட்டம் என்னும் இலக்கிய அமைப்பின் இருபது ஆண்டுகால இலக்கியப் பணி வரலாறு.

பிற நூல் ;

அமரத்துவம் (சிறுகதை)
அண்ணு கவிதாஞ்சலி
எழில்மிகு யாழ்ப்பாணம்

# முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றிலோ, அன்றி ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றிலோ இலக்கிய வளர்ச்சி என்பது சில தாபனங்களின் அனுசரணையுடன்தான் நடைபெற்று வந்துள்ளன என்பது தெரியவந்துள்ளது. தமிழ் வளர்த்த மூன்று சங்கங்களும், சங்கப் பலகைகளும் இந்த மரபு முறையைத் தொடக்கி வளர்த்து வந்துள்ளன.

சங்கங்கள் என்னும்பொழுதே சமூகப் பொறுப்புகளும், அவற்றின் வளர்ச்சிகளும் தொக்கு நிற்கின்றன.

ஒரு சில குழுவினர் தமது தனித்தன்மை, விசேஷ சிறப்புப் பண்புகள் என்பவற்றினுல் — குறிப்பிட்ட ஒரு துறையில் கொள்ளும் அதிக அக்கறையும் ஈடுபாடும் அத்துறையை வளர்த்து அது சமூகத்தின் பிரிக்க முடியாத ஓரம்சமாக்கி விடுகின்றது. அச்சமூகத்தின் வரலாற்றுச் சான்ருதாரங்களை நாளடைவில் நல்குவனவாகவும் அத்துறை அமைகிறது. இதில் கலை, இலக்கியத் துறைகள் மிக முக்கிய பணியைப் புரிகின்றன. கலை இலக்கியச் சான்றுகள் வரலாற்றுண்மைகளாக மட்டுமன்றி சமூகத்தின் பண்பாட்டு, விழுமிய நெறிகளின் உரை கல்லாகவும் மாறிவிடுகின்றன. நாகரிக வளர்ச்சியின் எல்லைக் கோடுகளை உலகளவிற்கு விரித்துச் செல்லும் தனியாய பண்பும் இதற்குண்டு. இதனுல் அச்சமூகமும் இலக்கிய நெறிகளினூடு தம் வாழ்வியலின் சிறப்புப் பண்புகளை ஊடகமாகக் கொண்டு செல்வதும் குறிப்பிடத் தக்கது.

இதனுற்ருன் இக்காலகட்டத்தில் 'தாபனங்களும் கலை இலக்கிய வளர்ச்சியும்' என்பது ஒரு ஆய்வுப் பொருளாக அமைநது போனது. இது ஒரு தவிர்க்க முடியாத செயற்பாடாகும். ஆயினும் இத்தகைய ஆய்வுகள் பல சிக்கல்களைக் கொண்டு விளங்குகின்றன. பல தாபனங்கள் பல்லாண்டு

களாக இயங்குவதாகக் கூறிக் கொண்டபோதும், அவர்களது பணி பற்றிய சான்றுகள் கோவையாகவோ, எழுத்து மூல மாகவோ இல்லாத காரணத்தால் பல பொய்மைகள் திரிபு கள், பிரச்சாரத்திற்கான திருத்தல்கள், காலத்திற்குத் தேவை யான சேர்க்கைகள் என்பன இடம்பெற்று வரலாற்றுப் பாதையில் தூசியாகவோ, பாருங்கல்லாகவோ படிந்துவிடு கின்றன. எனவே, இத்தகைய குறைபாடுகளைப் போக்க ஒழுங்கான நிர்வாகப் பத்திரங்களும், கூட்ட அறிக்கைகளும், பிரசுரங்களும், காலத்திற்குக் காலம் தாபனம் பற்றிய அறிக்கை வெளியீடுகளும் அவசியமாகின்றன.

இந்தக் குறைபாட்டைப் போக்க எழுந்ததுதான் இந்த நூல். வெள்ளிவிழா ஆண்டை அண்மித்துக்கொண்டிருக்கும் யாழ். இலக்கிய வட்டம் தனது தோற்றம், செயற்பாடு, இலக்கிய முயற்சிகளை தன் அங்கத்தவரின் வளர்ச்சி என்பன வற்றை இந்நூல் தகவல்களாகத் தருகிறது. தகவல்கள் தகவல்களாக வருகின்றனவேயன்றி, அத்தகவல்களுக்கான பின்னணி விளக்கங்களோ, அதிக பூச்சுக்களோ இல்லாதிருப் பதே இதன் சிறப்பாக விளக்குகிறது. இன்றைய கால, சமூக அரசியல் நிலைகளை மறந்து, அந்தர்தக் காலகட்டத்தில் இலக் கிய வட்டம் என்ன எண்ணியது? எப்படிச் செயற்பட்டது? என் பதனை பக்கஞ்சாராப் பாங்குடன் எழுதியிருப்பதே இதன் முக்கிய பண்பாகப்படுகிறது.

இதில் உண்மைகளை (Facts) வழங்கவேண்டும் என்ற முனைப்பே மேலோங்கி நிற்கிறது. ஆய்வு முறைகளோ, தேவை களோ இங்கு கவனிக்கப்படவில்லை. இத்தகைய நூல்களையே ஆரம்பத்தில் யாழ். இலக்கிய வட்டத் தாபக உறுப்பினரான இரசிகமணி கனக. செந்திநாதன் எழுதினர். அக்காலத்தில் அவை வெறும் நூற்பட்டியலாகவே கருதப்பட்டன. ஆனல் இன்று ஆய்வுக்குரிய மூலகங்களை வழங்கும் முதல் நூலாக விளங்குகின்றன.

யாழ். இலக்கிய வட்டத்தின் நீண்டகால உறுப்பினரும், ஆரம்பகால இணைச் செயலாளரில் ஒருவரும், அதிக ஆண்டுகள் அப்பதவியினை நிர்வகித்தவருமான சிறுகதை எழுத்தாளர் யாழ்வாணன் அவர்கள் இந்நூலினை வெளியிட யாழ் இலக்கிய வட்டத்தின் பழைய கூட்ட அறிக்கைப் பத்திரங்களையும் வெளியீடுகளையும் பயன்படுத்தியிருப்பது இந்த நூலின் கனத்தைக் கூட்டுகிறது.

இதுபோன்ற பல நூல்கள் இனி வெளிவரும்

வெளிவரத் தூண்டுதலாக அமையும் பெருமையும் இதற்குண்டு.

செம்பியன் செல்வன்

86-04-14

# பதிப்புரை

ஈழத்துத் தமிழ் கலை இலக்கிய வரலாற்றின் நிதர்சன உண்மைகள் கூறுபட்ட போக்குகளால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகின்றமை யாவருக்கும் தெரிந்த ஒன்றுதான். என்றாலும் அவ்வப்போது ஏற்படும் அருட்டுணர்வும், விழிப்புணர்ச்சியும் அவ்வப்போது நடைபெற்ற நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ளச் சுவடுகளாகவும் தடங்களாகவும் அமைந்து விடுவதும் இயற்கையே.

இந்த வகையிலே யாழ். இலக்கிய வட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும், செயற்பாடும் அதன் பங்களிப்பும் அது தொடர்பான கலை இலக்கிய ரீதியான பாதிப்பும் ஆய்வுக்குரிய தொன்றாகவுள்ளது. எமது நாட்டின் கலை இலக்கிய வரலாறு 1956 ம் ஆண்டை ஓர் குறியீடாகக் கொண்டு (அதாவது சற்று முன்பின்னாகக் கொண்டு) எவ்விதம் பரிணமித்ததென்பதை ''யாழ் இலக்கிய வட்டத்தின் கதையைச் சொல்லவந்த யாழ்வாணன் ஓரளவுக்கு நிலைப்பாட்டினைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஈழத்துத் தமிழ்க் கலை, இலக்கிய ஆய்வியலாளர்களுக்கோர் சிறந்த கையேடாகவும் வழிகாட்டியாகவும் இந்நூல் அமையுமென்பதில் ஐயமில்லை. இந்நூல் இலக்கிய அன்பர்களதும், வரலாற்றறிஞர்களதும் ஆதரவை நிச்சயம் பெறும் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

இதனாலேயே இந்நூலைப் பதிப்பித்து வெளியிடுவதில் யாழ். இலக்கிய வட்டம் மகிழ்ச்சியடைகிறது.

கல்வயல் வே. குமாரசாமி
இணைச் செயலாளர்

86-04-14




இரண்டு தசாப்தங்களுக்கு முன் பல இலக்கிய அமைப்புக்கள் சீராக இயங்கின.

அவற்றின் சேவை, சாதனை ஆகியன இன்றைய தலைமுறையினருக்குத் தெரியாது. தெரிந்திருக்க வேண்டும் என்றாலும் அதற்கான வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

காலத்துக்குக் காலம், சந்தர்ப்பத்திற்கேற்ற மாதிரி வரலாற்றுச் செய்திகளைத் திரித்துக் கூறுவதையே அவர்கள் நம்ப வேண்டிய நிலை.

அத் துர்ப்பாக்கிய நிலை எதிர்காலத்திலும் தொடரக் கூடாது என்ற பல நாள் சிந்தனையின் விளைவே இந்நூல்.

எமது கடந்தகால செயற்பாட்டினை, செய்திகளை எழுதி வைத்தல் இன்றைய காலகட்டத்தில் மிக இன்றியமையாததாகும்.

இன்றைய நிகழ்வுகள்... நாளைய வரலாறுகள்.

இந்நூல் எனக்குத் தெரிந்தவற்றை — சேகரித்த நிகழ்வுகளை மையமாக வைத்து எழுதப்பட்டது.

யாழ். இலக்கிய வட்டம் ஆரம்பமான காலகட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை முழுமையாக எழுதாவிட்டாலும் பின்னணியைத் தொட்டுக் காட்டியுள்ளேன்.

இன்று ஆரோக்கியமான இலக்கிய சூழ்நிலை இங்குள்ள எழுத்தாளர்களிடையே நிலவினாலும் கூட, காலத்தின் தேவையையொட்டி அக்காலப் பின்னணியை இக்கட்டுரை யிலிருந்து நீக்க விரும்பவில்லை.

இக்கட்டுரையைத் 'தினகரன்' வாரமலரில் தொடர்ந்து எழுதுவதற்குத் தூண்டுகோலாகவிருந்த ஈழமுரசு பிரதம ஆசிரியர் எஸ். திருச்செல்வம், தினகரன் வாரமஞ்சரியில் வெளியிட்ட தினகரன் பிரதம ஆசிரியரும், சட்டத்தரணியுமான ஆர். சிவகுருநாதன் ஆகியோருக்கு என் அன்பு கலந்த நன்றிகள்.

இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய 'அமிர்த கங்கை' கௌரவ ஆசிரியர் செம்பியன் செல்வன், பதிப்புரை நல்கிச தம்பி வே. குமாரசாமி, அச்சிட உதவிய சசிபாரதி, மணியோசை அச்சகஊழியர் ஆகியோருக்கு என் உளமார்ந்த நன்றிகள்.

அன்புடன்
**யாழ்வாணன்**

56/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

# 1

பல்லின மக்கள் வாழ்கின்ற ஒரு சமூக அமைப்பிலோ, நாட்டிலோ அல்லது இலங்கை போன்ற சின்னஞ்சிறிய தீவுகளில், பல்வேறு காலகட்டங்களில் அவ்வப்போது அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அடிப்படையில் சிறிய இனங்களால் எடுக்கப்படுகின்ற முடிவுகளும், அமைப்புகளும் ஆழ்ந்த அர்த்தபுஷ்டி நிரம்பிய படிமங்களாக, வரலாற்று நியதியில் கலந்துவிடுகின்றன. ஏனெனில் சிற்றினங்களின் தீர்மானங்கள் பேரினங்களைச் சார்ந்தும் அவர்களது ஆதரவைப் பெறும் நோக்கத்துடனும் அவர்களது சீற்றத்தைத் தவிர்க்கும் முறையிலும் அமைதல் தவிர்க்க முடியாததாகும். எனவே சிற்றின மக்கள் தங்கள் தேவை கருதி ஏற்படுத்தும் கட்சிகளும், கொள்கைகளும் இலக்கியமும், அதன் நெறி எல்லாமே பேரினக்காரரின் அரசியல், சமூக, பொருளாதார கலாச்சாரப் பின்னணிகளைச் சார்ந்தும் அவற்றிற்கு ஊறு விளைவிக்காதனவாகவும் அமைய வேண்டிய அத்தியாவசியத்தை நன்குணர்ந்தே செயற்பட வேண்டும் என்பதற்கு எம் தமிழர்களின் அரசியல் இலக்கியப் போக்குகள் சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளன.

''தேசிய ஒருமைப்பாடு'' — என்ற தத்துவத்தை இலக்கியத்தாலும் அரசியலாலும் மிக வற்புறுத்தி நின்றவர்கள் சிறுபான்மையினரான தமிழர் என்பது எல்லாவற்றிற்கும் பொருத்தமான எடுத்துக்காட்டாகும்.

1930களில் டொனமூர் அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்ததால் தோன்றிய சர்வசன வாக்குரிமை, பின்னர் எழுந்த இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி எல்லாம் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைப் பெரிதும் பாதித்தது. முப்பதுகளில் தமிழர்களின் முன்னணிப் பத்திரிகையாக விளங்கிய ஈழகேசரி 'டொனமூர் நடைமுறை'யை எதிர்ப்பதற்காக சேர். பொன்னம்பலம் இராமநாதன் மேற்கொண்ட அரசியல் முயற்சி

களுக்கு ஆதரவு கொடுப்பதற்காகப் பெரிதும் பாடுபட்டது. இலங்கைச் சிங்கம் என சேர் பொன். இராமநாதன் அழைக்கப்பட்டதன் பிரதிபலிப்புத்தான் ஈழகேசரி என்ற பெயர். ஆயினும், அக்காலத்தில் தமிழகத்தில் வெளிவந்த திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் நடாத்திய 'நவசக்தி' பத்திரிகை ஈழகேசரிக்குச் சிறந்த வழிகாட்டியாக மிளிர்ந்தது. எவ்வாறாயினும் 1930 ஆம் ஆண்டளவுகளில் தோன்றிய தமிழ் எழுத்துக்களை அக்கால அரசியலின் தவிர்க்க முடியாத தோற்றம் எனலாம்.

1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைய — அதனுடன் பல பிரச்சனைகளும் சுதந்திரமடைந்தன. இன வேறுபாடு, ஆட்சியியலில் சம உரிமை, பொருளாதாரச் சீர்குலைவு என்பனவும் தோன்றின. இவ்வேறுபாடுகளினால் ஏற்பட்ட பற்றுக்குறைகளும், போட்டி மனப்பான்மைகளும் உரிமைப் போராட்டங்களும் பலவித சீர்குலைவுகளை ஏற்படுத்தின. இப் பிரச்சனைக்கான தீர்வுகளை அரசியல்வாதிகள் மொழி, இனம், மதம் என்பனவற்றாலும், பழம்பெருமை, வரலாறுகளினாலும் தீர்க்க முற்பட்டனர். இவை சொந்த மண்ணில் காலூன்றி தமது பார்வையை தீவினுள்ளேயே குவித்து பிரச்சனைகளையும் அதன் முடிவுகளையும் தீர்மானிக்க முற்பட்டனர். அதே வேளையில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு உலகளாவிய அகலுலகக் கண்ணோட்டத்துடன் இப்பிரச்சனைகளைத் தீர்க்கவும் வேறு சிலர் முற்பட்டனர். பழம்பெருமை, உரிமை பேசுபவர் மத்தியில் பொருளாதார அடிப்படை ஆய்வுகள் அரங்கேறவில்லை.

1956ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் தேசிய எழுச்சி முன்னிடம் பெற்றது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோசலிசக் கொள்கையென்பன சிறப்பிடம் வகிக்க, இலக்கியங்களும் அவற்றையே பிரதிபலித்தன. அத்தகையனவே சிறந்த இலக்கியங்களாகவும் முற்போக்கு இலக்கியங்களாகவும் கருதப்பட்டன. இந்தப் பின்னணியில் இரு வேறுபட்ட சிந்தனைப் போக்குகளும் இலக்கியத்தில் எழலாயின.

1960 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் தாய்மொழி மூலம் கல்வி கற்கக் கிடைத்த வாய்ப்பு சிங்கள மொழி இலக்கியத்திற்கும் தமிழ்மொழி இலக்கியத்திற்கும் சிறந்த நற்பலனை அளிக்கத் தொடங்கியது. இவர்கள் பாட நூல்களிலும் பாடப் பகுதியிலும் உலகின் சிறந்த பிறமொழி இலக்கியங்களும் இடம்பெற்றிருந்ததால், நல்லிலக்கியங்களைப் பற்றிய தெளிந்த தேறலும், தெரிவும் — விமர்சனப் பாங்கான அணுகல்களும் கல்வி ரீதியான ஒழுங்குமுறையை நல்கியிருந்தது. அதேபோல பல அரசியல் சித்தாந்தங்களை உணர்வு பூர்வமாக விரிவாக அறியும் ஆற்றலும் கொண்டிருந்ததோடு, அவற்றை உண்ணுட்டுடன் ஒப்பிட்டு அவற்றின் பொருத்தப்பாட்டினை உணருகின்ற திறனையும் பெற்றிருந்தனர்.

## 2

**1956/57**ம் ஆண்டுகளுக்கு முன்னைய பத்தாண்டுகளாகப்பல எழுத்தாளர் அமைப்புக்கள் அவ்வப்போது தம் நோக்கங்கள், வாய்ப்பு வசதிகள், ஆற்றல்களுக்கேற்ப பல இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தன. எனினும் 56/57ம் ஆண்டுகளுக்குப் பின்னர் தான் நாட்டில் பரவலாக பொருளாதார — அரசியல் — கலாச்சாரத் துறைகளில் புதிய சிந்தனைகள் ஏற்படத் தொடங்கின. இந்த மாற்றங்கள் வரலாற்று நியதிக்குட்பட்டதாகும். இந்த நியதி மாற்றத்தை உணர்ந்தோருக்கும் உணராதோர்க்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளே சமூகத்தை மட்டுமல்லாது இலக்கியத்தையும் பாதித்தது.

இடதுசாரி இயக்கங்கள் தங்கள் அரசியல் சித்தாந்தங்களோடு கலை இலக்கியத் துறையையும் இணைத்துச் செயற்பட முனைந்து நின்றனர்.

மரபுவழி நின்று இலக்கியம் படைப்போர் ஓரணியாகவும், அரசியல் சித்தாந்தங்களோடு இரண்டறக் கலந்த எழுத்

தாளர்கள் மறு அணியாகவும் செயற்படத் தொடங்கினர். இதனால் முற்போக்கு, பிற்போக்கு நற்போக்கு எனப் பல போக்குகள் முளைவிட்டன.

இழிசினர் வழக்கு, மண்வாசனை, மரபு, தேசிய இலக்கியம், மக்கள் இலக்கியம் போன்ற புதிய சொற்றொடர்கள் ஆக்க இலக்கியத் துறையினரால் வாசகர்களிடையே அறிமுகப் படுத்தப்பட்டு அதனால் இலக்கிய சர்ச்சைகள் ஏற்படுத்தப் பட்டன.

அணிவழி நின்று ஒருவர்மேல் ஒருவர் மேடைகளிலும் பத்திரிகைகளிலும் வசைமாரி பொழிந்தனர். அச்சந்தர்ப்பத்தில் புதிய தலைமுறை எழுத்தாளர்கள் சிலரும் அவ்வணிக் கோட்பாடுகளில் சேர்ந்து கொண்டமை விசனிக்கத் தக்கது.

இவ்விலக்கியச் சச்சரவு பேராதனைப் பல்தலைக்கழக மாணவர் விரிவுரையாளர்வரை வியாபித்தது.

1960 / 64ம் ஆண்டளவில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வாதப்பிரதிவாதங்களுக்கு ஈடுகொடுத்து முற்போக்கு எழுத்தாளர்களின் பிரச்சாரங்களுக்கு முகம் கொடுத்துச் செயற்பட்ட மாணவர் சிலருள் செம்பியன் செல்வன், செங்கை ஆழியான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அக்கால கட்டத்தில் தினகரன் பத்திரிகை ஆசிரியராக பேராசிரியர் க. கைலாசபதி கடமையாற்றினார். அப்பத்திரிகையில், முற்போக்கு அணியினரின் பிரசாரத்திற்குக் களம் அமைத்துக் கொடுத்ததுடன், அவர்கள் சார்பாக பல கட்டுரைகள், விமர்சனங்களையும் வெளியிட்டு வந்தார்.

அக்காலத்தில் மற்றைய தினசரியான வீரகேசரியின் நிர்வாகம், தமிழகத்தவரினாலேயே நடாத்தப்பட்டது. அதனால் அவர்கள் இப்பிரச்சனையில் கவனம் செலுத்தவில்லை.

1966ம் ஆண்டில், குணசேன நிறுவனத்தினால் தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. அதனைத்

தொடர்ந்து வீரகேசரி ஸ்தாபனம் மித்திரன் மாலைத் தினசரியைத் தொடங்கியது. அதற்குப் போட்டியாக 'தந்தி' என்ற பத்திரிகையொன்றை குணசேஞ நிறுவனத்தினர் தொடங்கினர். பின் ராதா, சுந்தரி என்ற வார ஏடுகளையும் வீரகேசரி நிர்வாகத்தினர் 'ஜோதி' என்ற வார ஏட்டினையும் தொடங்கினர்.

இப்பத்திரிகைகள் யாவும், தென்னகப் பத்திரிகைகளைப் பிரதிபிம்பப்படுத்துவது போல செய்திகள், கதை கட்டுரைகளை வெளியிட்டன. ஜனரஞ்சகம் என்ற ரீதியில் விற்பனையொன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டன. இவற்றை விட வேறுபல சஞ்சிகைகளும் வெளிவந்தன. இவைகளும் தமிழக சஞ்சிகைகளின் உருவம் உள்ளடக்கம் ஆகியவற்றை அப்படியே பின்பற்றி வெளிவந்தன.

இக்காலகட்டத்தில் சிரித்திரன், விவேகி, மல்லிகை போன்ற பல இலக்கிய சிற்றேடுகள் வெளிவந்தன.

கோஷடி சேர்ந்து எழுத்தாளர்களை எழுத்தாளர்களே எதிர்த்தும், பேசியும், கூட்டங்களைக் குழப்பி இலக்கிய உலகைக் குட்டை குழப்பி – பிரச்சாரப் பலத்தால் அரசியல் லாபம் தேடிய காலகட்டம்.

இக்காலகட்டத்தில்தான் பழைமையைப் புரிந்து மரபுமீறுமல் அவற்றின் கட்டுக்கோப்புக்குள் நின்று சமூக நலன் பயக்கும் – ஆரோக்கியமான இலக்கியம் படைக்கும் ஆற்றல் உள்ள எழுத்தாளர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி உருவாக்கப்பட்டதுதான் யாழ். இலக்கிய வட்டம்.

யாழ். இலக்கிய வட்டத்தின் தோற்றம், அக்காலகட்டத்தில் முற்போக்கு எழுத்தாளர்கள் எனத் தம்மை முத்திரையிட்டுக் கொண்டவர்களுக்கு மருட்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். யானை பார்த்த குருடன் கதைபோன்று, யாழ். இலக்கிய வட்டத்தினர் யாவருமே அவர்களுக்கு பிற்போக்குவாதிகளாகத் தென்பட்டனர். அதனுல் இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகளை விமர்சித்தும், பேசியும், எழுதியும் வந்தனர்.

இவர்களின் இத்தவறான எதிரணிப் போக்கு, யாழ் இலக்கிய வட்ட உறுப்பினர்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. ''எதிரணியினர் இலக்கியம் பற்றிக் கொண்டுள்ள தவறான எண்ணங்களை செயல் ரீதியாக செயற்பட்டு முறியடிக்க வேண்டும்'' சமூக நலன் பயக்கும், ஆரோக்கியமான ஈழத்துப் புத்திலக்கியங்கள் உருவாக வேண்டுமென்ற இலட்சியத்துடன் கொள்கை வேறுபாடுகளிருப்பினும் அவற்றை விஞ்சிய இலக்கிய நோக்கத்தை அடித்தளமாகக் கொண்டு 1965ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. யாழ். இலக்கிய வட்டம் பின்வரும் நோக்கங்களை இலட்சியமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியது.

1. உறுப்பினர்களின் படைப்புக்களை நூல்களாக வெளியிடுதல்; பிற எழுத்தாளர்களின் நூல்களை அறிமுகஞ் செய்தல்.

2. இலக்கிய முயற்சியில் ஈடுபட்டுழைத்த பெரியார்கள், எழுத்தாளர்கள் ஆகியோர்களைக் கௌரவித்தல்; மறைந்த எழுத்தாளர்களுக்கு விழாவெடுத்தல், புலவர் தினங்களைக் கொண்டாடுதல்.

3. இலக்கியப் பிரச்சனைகள், கதை – கட்டுரை – நாடகம் – கவிதை அரங்குகளை நடாத்துதல்.

4. கட்சி பேதமின்றி இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கமளித்தல்.

5. ஈழத்து நூல்களை மக்கள் முன் பரவலாகப் பிரச்சாரம் செய்தல்.

யாழ். இலக்கிய வட்டத்தின் ஸ்தாபக உறுப்பினர்களும், அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்து ஆலோசனை நல்கியவர்களான இரசிகமணி கனக. செந்திநாதன், மதுரகவி இ. நாகராஜன், செல்லத்துரை ஆகியோர் இன்று எம்மிடையே இல்லை.

# 3

யாழ். இலக்கிய வட்டத்தின் முதலாவது ஆண்டில் இரசிகமணி கனக. செந்திநாதன் தலைவராகவும், சைவப்புலவர் க. சி. குலரத்தினம் துணைத்தலைவராகவும். செயலாளராக யாழ்வாணன், துணைச் செயலாளராக சசிபாரதி, பொருளாளராக இ. அம்பிகைபாகன் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், சு. வே., ஏ. ரி. பொன்னுத்துரை. வி. கந்தவனம், எஸ். செல்லத்துரை, கே. வி. நடராஜன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ். இலக்கிய வட்டத்தின் முதலாவது நிகழ்ச்சியாக சென்னை வை. எம். சி. ஏ. பட்டிமன்றத் தலைவரும், தமிழ் எழுத்தாளர் சங்க செய்ற்குழு உறுப்பினருமான 'அன்புப் பழம்நீ' அவர்கள் கலந்துகொண்டு "பழகும் கலை" என்னும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

சிறுகதையரங்கு, கவிதையரங்கு ஆகியன மாதாமாதம் தொடர்ந்து நடாத்தப்பட்டது. இலைமறைகாய்களாக இருந்த புதிய தலைமுறையினரை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களுடைய படைப்பாற்றலை வெளிக்கொணர இவ்வரங்குகள் மூலகாரணமாக அமைந்தன.

நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்ற கவியரங்கு' உரையரங்கு ஆகியவற்றில் எமது உறுப்பினர்கள் பங்குபற்றினர்கள். குறிப்பாக கவியரங்கு மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. அதனூடாக எமது நோக்கங்களை எடுத்துக் கூறக் கூடியதாக கவியரங்குகள் பயன்படுத்தபபட்டன.

அப்போது நூலகங்கள், ஜனசமூக, — கல்லூரி நூலகங்களில் ஈழத்து நூல்களைக் காண்பதரிதாகவிருந்தது. தமிழக நூல்கள் — சஞ்சிகைகள் ஆகியவையே அவற்றை அலங்கரித்தன. நம் நாட்டு எழுத்தாளர்களின் சிருஷ்டிகளின் தரத்தை

அறியாத — அறிய முற்படாத நிலையில் மேற்படி நூலகங்களினால் அவை புறக்கணிக்கப்பட்டிருந்தன.

யாழ். இலக்கிய வட்டம் இந்நிலையை மாற்றியமைக்க கங்கணங் கட்டியது. நம் எழுத்தாளர்கள் — அவர்கள் எந்த எந்த அணியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் அவர்களின் சிருஷ்டித் திறனை அவ்வப்போது பல கட்டங்களில் வெளியிட்டது.

17 — 9 — 66 ல் யாழ். நகரமண்டபத்தில் ஈழத்துத் தமிழ் நூல்களின் கண்காட்சியினைப் பல சிரமங்களுக்கு மத்தியில் நடாத்தி ஈழத்து மக்களின் கவனத்தை ஈர்த்தது யாழ் இலக்கிய வட்டம்.

ஈழத்து ஆக்கங்கள் அந்நாட்களில் நூலகங்களினால் மட்டுமல்ல நம் மக்களாலேயேயும் உதாசீனப்படுத்தப்பட்டு வந்தன. புத்தகக் கடைகளில் கூட ஈழத்து ஆக்கங்கள் எங்காவது மூலையில் கட்டி வைக்கப்பட்டிருக்கும். தமிழக நூல்கள் ஈழத்து வாசகர்களை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த காலமது.

இந்நிலைமையை மாற்றி அமைக்க வட்டம் முயற்சி செய்தது. 'நமது நாடு, நமது நூல்கள், நமது எழுத்தாளர்கள்' என்ற கோஷத்தை முன்வைத்துச் செயற்பட்டது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். கல்வி அதிகாரி ஆகியோரைப் பேட்டி கண்டும், கல்லூரி அதிபர்களுக்கு "ஈழத்துத் தமிழ் நூல் வழிகாட்டி" நூலை இலவசமாக அனுப்பிக் கல்லூரி நூலகங்களுக்கும் சனசமூக நிலையங்களுக்கும் ஈழத்து நூல்களை வாங்கி வைக்கும்படி வேண்டுகோள் விடுத்தது.

அத்துடன் "தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் ஆபாச — நச்சு — நசிவு இலக்கியங்களைத் தடை செய்ய வேண்டும். இவற்றின் வரவால் நம் நாட்டுப் பொருளாதாரம் மட்டுமன்றி வாசகர்களின் இரசனையும் மழுங்கடிக்கப்பட்டு சீரழிக்கப்படுகின்றன" என்பதனைக் கோரிக்கையாக அன்றைய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. அத்துடன் மேடைகளிலும் பத்திரி

கைகளிலும் பேசியும் எழுதியும் வந்த வட்டக் கோரிக்கையையிட்டும் வாதப்பிரதிவாதங்கள் பத்திரிகைகளில் எழுதப்பட்டன.

வட்டம் தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் அறிவு சால் நூல்களைத் தடை செய்யும்படி கோரவில்லை. அங்கிருந்து வியாபார நோக்குடன் இறக்குமதியாகும் தரமற்ற நூல்களை, சஞ்சிகைகளை மாத்திரமே இறக்குமதி செய்வதைத் தடைசெய்ய வேண்டும் எனக் கோரியது.

எமது நாட்டு எழுத்தாளர்களை — அவர்களின் ஆக்கங்களை அவர் எந்த அணியைச் சேர்ந்தவராயிருந்தாலும் நேசிப்பவர்கள்; அவற்றின் வளர்ச்சிக்காக செயற்படுபவர்கள் என்ற ரீதியில்தான் கோரிக்கை விடுக்கப்பட்டது

இக் கோரிக்கையை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒருமனதாக ஆதரித்துச் செயற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய அரசாங்கம் புத்தக இறக்குமதியில் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது.

அதன் பயனாக ஈழத்து இலக்கிய உலகில் புத்துணர்வு ஏற்பட்டது. ஈழத்து ஆக்கங்கள் பல நூலுருப் பெற்றன. பல பதிப்பகங்கள் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டன. நூலகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள் பெருமளவில் இடம் பெற்றன அச்சமயத்தில் யாழ். இலக்கிய வட்ட கோரிக்கைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த முன்னாள் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களான எஸ். சி. மாணிக்கவாசகர், சு. முருகவேள் ஆகியோரை ஈழ இலக்கிய உலகு ஒருபோதும் மறவாது.

பல பத்திரிகைகள் இலக்கியச் சிற்றேடுகள் தொடங்கப்பட்டன. அவற்றிற் பெரும்பான்மையானவை, தமிழகத்து ஆபாச — நசிவுச் சிற்றேடுகளைப் பிரதிபலித்தே வெளியாகி அற்பாயுளில் மடிந்து போயின.

ஜனநாயக உலகில் பத்திரிகைகள் செய்கின்ற பணி மகத்தானது. ஒரு நாட்டின் அரசியலை ஆக்குவதும் அழிப்பதுவும் பத்திரிகைகளின் கைகளிலே தங்கியுள்ளது. அதுமட்டுமல்ல, மக்களின் இலக்கிய இரசனையை உயர்த்தும் சாதனமாகவும் அது விளங்குகின்றது. நல்ல இலக்கிய இரசனையை மக்களிடையே ஊட்டி வளர்க்கவும் பத்திரிகைகளால் முடியும்.

தரமான இலக்கியங்களை நுகர்வோர் தொகை எவ்வளவுக்கெவ்வளவு கூடுகின்றதோ அதே அளவு நல்ல இலக்கியங்கள் உருவாக வழி பிறக்கும். இவற்றிற்கு களம் அமைத்துக் கொடுப்பவை பத்திரிகைகளே.

கால் நூற்றுண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண மக்கள் புதினப் பத்திரிகைகளாக கொழும்பையே எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை இருந்தது.

இன்று அந்நிலைமாறி யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே மூன்று தினசரிகள் ஈழநாடு, ஈழமுரசு, உதயன் — பிரதேசப் பத்திரிகைகளாக வெளியிடப்படுகின்றன. ஒவ்வொன்றும் பதினையாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகின்றன. இவற்றுடன் கொழும்பிலிருந்து வெளியாகும் தேசியப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி போன்றவையும் விற்பனையாகின்றன. இவை யாழ்ப்பாண மக்களிடையே பத்திரிகை வாசிக்கும் பழக்கம் அதிகரித்துக் கொண்டே போகின்றது என்பதையே காட்டுகின்றது.

அதே நேரத்தில், இலக்கியச் சிற்றேடுகளின் விற்பனையில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதை யாம் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

அந்நிலைக்குக் காரணம்?

பழையபடியும் தமிழக ஆபாச சஞ்சிகைகள், நச்சு இலக்கியங்கள் புத்தகக் கடைகளை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. இவை அரசாங்கத்தின்

தாராள இறக்குமதிக் கொள்கை காரணமாக புத்தக இறக்குமதியாளரின் செயற்பாட்டின் விளைவு. 1966 ம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டவற்றைப்போல மூன்று மடங்கு கூடுதலாக இன்று இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் லட்சிய நோக்குடன் செயல்படும் சிற்றேடுகள், மட்டுமல்லாது எழுத்தாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

இந்நிலையை மாற்றி அமைக்க இலக்கிய அமைப்புக்கள் யாவும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதவசியம்.

முதலாவது ஆண்டில் கே. வி. நடராசன் எழுதிய **யாழ்ப்பாணக் கதைகள்**, க. குணராஜா எழுதிய **சுருட்டுக் கைத்தொழில்**, இவர் சேர்ந்து எழுதிய **நீதிக் கரங்கள்** (காவியம்) இரசிகமணி தொகுத்தளித்த **ஈழத்து தமிழ் நூல் வழிகாட்டி** ஆகிய நூல்களை வெளியிட்டோம்.

இவ்வாண்டில் இலங்கைக் கலைக்கழகம் நடாத்திய ஓரங்க நாடகப் போட்டியில், **சு. வே, ஏ.ரி. பொன்னுத்துரை** ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம் பரிசுகளைப் பெற்றனர்.

சிறுகதை வாரத்தினையொட்டி இலங்கை வானொலி நடாத்திய போட்டியில் இரசியமணி **கனக. செந்திநாதன், சு. வே., செம்பியன் செல்வன், இ. நாகராஜன்** ஆகியோரது கதைகள் தெரிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட்டன.

யாழ். இரத்த தானச் சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் மு. **கனகராசன், யாழ்வாணன், பெரி. சண்முகநாதன்** ஆகியோர் பரிசு பெற்றனர். **கவிதைப்** போட்டியில் **அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா, கல்வயல் வே. குமாரசாமி** ஆகியோர் பரிசு பெற்றனர்.

# 4

சிலாபம் தமிழ் மன்றம் நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் யாழ்வாணன் இரண்டாவது பரிசு பெற்றார்.

புரட்டாதித் திங்களில் ஈழத்திற்கு வருகை தந்த 'தீபம்' ஆசிரியர் நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்) 'புதுமை இலக்கியம்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அடுத்தநாள் எழுத்தாளர் சந்திப்பின்போது மணிவண்ணன், அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் கலந்துரையாடினர்.

முதலாவது ஆண்டுவிழா யாழ். நகரமண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ் விழாவில் 'இலக்கியம்' என்ற மலர் வெளியிடப்பட்டது. அம்மலருக்கு இணையாசிரியர்களாக செம்பியன் செல்வன் – யாழ்வாணன் ஆகியோர் பணியாற்றினர். அம்மலரில் ''பிளவுற்று நிற்கும் நமது எழுத்தாளர் கூட்டத்திற்கு ஒற்றுமையின் பலத்தை இது உணர்த்தி நிற்பதினால் இது ஒரு காலத்தின் தேவையே'' எனக் குறிப்பிட்டிருந்தது. அக்குறிப்பு இன்று ஈழத்திலுள்ள எழுத்தாளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளது. இது யாழ். இலக்கிய வட்ட செயற்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

ஆண்டுவிழாவின் மற்றொரு சிறப்பு அம்சமாக தமிழ் இலக்கிய உலகில் குறிப்பாக தமிழகத்தில் பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டு ஈழத்தவரின் பெருமையை அங்கு நிலை நாட்டிய தமிழறிஞர் ந. சி. கந்தையாபிள்ளை, கவிஞர் வே. சிவக்கொழுந்து (யாழ்ப்பாணன்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள். ''எழுத்தாளன் வாழும்போது கௌரவிக்கப் படுவதில்லை'' என்ற கூற்றைப் பொய்யாக்கும் விதத்தில் இவ்

வைபவம் நடைபெற்றது. முன்னவரைக் க. சி. குலரத்தினம் அவர்களும், பின்னவரை வி. கே. இராஜதுரை (ராஜபாரதி) அவர்களும் பாராட்டிப் பேசினர்.

முதலாவது ஆண்டில் செயற்பட்டதிலும் அடுத்த ஆண்டுகளில் செயலூக்கம் அதிகரித்தது.

"ஈராண்டு காலத்திற்கு முன் ஈழத்து இலக்கிய உலகில் ஏற்பட்டிருந்த தேக்க நிலையை மாற்றி அமைத்து எழுத்தாளர் களிடையேயும் வாசகர்களிடையேயும் என்றுமில்லாதவாறு புத்துணர்வையும் விழிப்புணர்ச்சியையும் கடந்த இரண்டாண்டு காலத்தில் யாழ். இலக்கிய வட்டம் ஏற்படுத்தியுள்ளது. அதன் பயனுக நம் எழுத்தாளர்கள், வாசகர்கள் மத்தியில் 'எமது நாடு, எமது எழுத்தாளர்கள், எமது நூல்கள்' என்ற தேசிய மனப்பான்மை வேரோடியுள்ளதை யாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது" என இரண்டாவது ஆண்டறிக்கையில் (1968) செயலாளர் யாழ்வாணன் குறிப்பிட்டிருந்தார்.

முதலாவது ஆண்டில் நான்கு நூல்களை வெளியிட்ட நாம் பிரபல எழுத்தாளர்களான எஸ். பொன்னுத்துரை எழுதிய 'வீ' சிறுகதைத் தொகுதி, பா. பாலேஸ்வரி எழுதிய 'சுடர் விளக்கு' ஆகிய நூல்களுக்கு அறிமுக விழாவினையும் நடாத்தியுள்ளோம். மேலும் செம்பியன் செல்வன் எழுதிய 'அமைதியின் இறகுகள்' (சிறுகதை), கவிஞர் வி. கந்தவனம் எழுதிய 'ஏனிந்தப் பெருமூச்சு' (கவிதை), ஏ. ரி. பொன்னுத்துரை எழுதிய 'இறுதிப் பரிசு' (நாடகம்), இரசிகமணி கனக. செந்திநாதன் எழுதிய 'வெண்சங்கு' (சிறுகதை) ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

ஈழத்திலுள்ள நூலகங்கள், கல்லூரி நூலகங்கள் ஆகியவற்றில் ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் நூல்கள் புறக்கணிக்கப்பட்டிருந்த நிலையை மாற்றியமைத்த பெருமை யாழ். இலக்கிய வட்டத்தையே சார்ந்தது. ஈழத்து நூல்கள் பரவ

லாக எல்லா நூலகங்களிலும் இடம் பெற்றதுடன் வாசகர்களின் நல்லாதரவையும் பெற்றன.

ஸ்தாபன ரீதியாக ஈழத்து இலக்கித்திற்கு நாம் நல்கிய சேவையைவிட நமது உறுப்பினர்கள் பல சாதனைகளைச் செய்து இலக்கிய வட்ட வளர்ச்சியின் பெருமைக்கு ஊன்று கோலாக இருந்ததுடன் ஈழநாட்டின் பெருமையை வெளிநாட்டிலும் நிலைநாட்டினர்.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, பதுளை பாரதி கல்லூரி நடாத்திய அகில இலங்கைக் கவிதைப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றார். இலங்கை கலைக்கழகம் நடாத்திய நாடக எழுத்துப் போட்டியில் முழுநீள நாடகத்திற்கான முதற் பரிசை சு. வேலுப்பிள்ளை (சு. வே) யும் இரண்டாது பரிசை செம்பியன் செல்வனும், ஓரங்க நாடகத்துக்கான முதலாவது பரிசை ஏ. ரி. பொன்னுத்துரையும் பெற்றுக்கொண்டனர்.

1968ம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி நடாத்தப்பட்ட "பூம்புகாரில் ஒரு நாள்" என்ற அனைத்துலக கவிதைப் போட்டியில் சான்றிதழ்களும், பதக்கமும் பெற்ற ஏழு கவிதைகளில் இரண்டு கவிதைகள் எமது உறுப்பினர்களான இ. அம்பிகைபாகன் (அம்பி), மதுரகவி இ. நாகராஜன் ஆகியோருடையனவாகும். அம்மகாநாட்டில் அம்பி எழுதிய "கலைச்சொல்லாக்க ஒருமைப்பாட்டிற்கு அனைத்துலக இணைப்புக் குழு" என்ற கட்டுரையும் வாசிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

தமது பதவிக் காலத்தில் எமது கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்த யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. முருகவேள் யாழ். இலக்கிய வட்டத்தின் இரண்டாவது ஆண்டு விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''தமிழின் சால்பையுணர்ந்து தக்க முறையில் இலக்கியத்தைப் பேணும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ். இலக்கிய வட்டம் இரண்டாண்டுகளாக பல துறைகளில், பல்வேறுபட்ட ஆக்க வேலைகளைச் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது. யாழ். இலக்கிய வட்டம் பெரியதொரு விருட்சமாக வளர்ந்து இலக்கியப் பணிபுரிய வேண்டும்''

டில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் சாலை. இளந்திரையன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் ''யாழ். இலக்கிய வட்டம் தனது இரண்டாவது ஆண்டுவிழாவைக் கொண்டாட இருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். இவ்வட்டம் சில நல்ல இலக்கிய நூல்களை வெளியிட்டிருப்பதை ஏற்கனவே அறிந்துள்ளோம். மக்களிடையே புத்திலக்கிய ஓர்மையை ஏற்படுத்தும் பலவிதமான பணிகளிலும் அது தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளது என்பதனை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலக்கியம் என்பது பொதுவாகத் தனிமனித முயற்சியே என்றாலும் அது உருவாகவும், மக்களிடையே வரவேற்புப் பெறவும் பல அம்சங்கள் துணைபுரிகின்றன. அவற்றுள் இலக்கியக் காரர்களிடையே நடைபெறும் கலந்துரையாடல், இலக்கிய ரசனை, பற்றிய கலந்துரையாடல், புதிய படைப்புக்களைப் பற்றிய விளம்பரம் முதலியன முக்கியமானவை. பலர் சேர்ந்த ஒரு நிறுவனமே இத்தகைய புற அம்சங்களால் இலக்கியத்திற்கு ஊக்கமளிக்க முடியும். அந்தப் பணியை யாழ். இலக்கிய வட்டம் ஆர்வத்தோடும், இடைவிடாமலும் செய்துவருவது பாராட்டத்தக்கது'' — எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழகத்திலிருந்து வருகை தந்த இலக்கியத் தம்பதிகளான பாரதியாரின் பேத்தி விஜயபாரதி, அவரது கணவர் பி. கே. சுந்தரராஜன் தமதுரையில் ''இலக்கியம் படைப்பதில் ஈழத்து எழுத்தாளர்கள் மத்தியில் இன்று காணப்படும் ஆர்வமும் துடிப்பும் தமிழகத்தில் சிறிது கூடக் கிடையாது. அங்குள்ள எழுத்தாளர்கள் ஒவ்வொருவரையும் நன்கு அறிந்தவன் என்ற வகையில் இதனைக் கூறுகின்றேன். இங்கு காணி

விற்றுப் புத்தகம் போடுகிற எழுத்தாளர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் அங்கு புத்தகம் விற்றுக் காணி வாங்குகிறார்கள்'' என்றார்.

1967ம் ஆண்டு, யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதார சுருதியாக விளங்கிய இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களது பொன்விழாவும் – நூல் வெளியீட்டுவிழாவும் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்றன.

இரசிகமணி கனக. செந்திநாதன் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இலக்கிய உலகில் பலதுறைகளிலும் சேவை செய்துள்ளார். இவ்விழாவில், இரசிகமணியைப்பற்றி பிற அறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்து இரசிகமணி மலர் மாலையென்ற நூலினை யாழ். இலக்கிய வட்ட வெளியீடாக வெளியிடப்பட்டது.

13–1–68ல் செஞ்சொற் கொண்டல் சொ. சிங்காரவேலன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. இரண்டாவது ஆண்டு நிறைவு விழாக் கூட்டம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற மதுரகவி இ. நாகராஜன், இ. அம்பிகைபாகன் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். அம்பி எழுதிய 'கிறீனின் அடிச்சுவடு' என்ற நூலின் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

இரண்டாவது ஆண்டில் 6 பொதுக்கூட்டங்களையும் 4 சிறப்புக் கூட்டங்களையும் நடத்தினோம்.

முதலாவது ஆண்டில் யாழ்வாணனுக்கு உறுதுணையாக விருந்துசெயற்பட்ட செம்பியன் செல்வன் இவ்வாண்டும் முன்னைவிட அதி ஆர்வத்துடன் யாழ்வாணனுடன் ஒன்றிணைந்து இலக்கிய வட்ட வளர்ச்சிக்காக முழுமூச்சுடன் செயற்பட்டார்.

வாழும் இலக்கியத்தைப் படைத்தல், படைப்பவர்களை ஊக்குவித்தல் என்ற அளவில் இதன் நோக்கம் நின்றுவிட வில்லை. எம் நாட்டு இலக்கியத்தினை எடுத்தியம்பி பொது மக்கள் மத்தியில் இலக்கிய இரசனை வளர்ப்பதுவும் எமது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். கிராமப்புறங்களில் இலக் கியக் கூட்டங்களை நடாத்தியும், எமது ஆற்றல் வாய்ந்த உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் பிற விழாக்களில் ஈழத்து எழுத்தாளர்களின் பெருமையை வலியுறுத்தியும் மூன்றாவ தாண்டில் செயற்றிட்டம் அமைந்தது.

எமது எழுத்தாளர்களின் படைப்புக்கள் பலவற்றைப் பிற பதிப்பகங்கள் வெளியிட்டிருப்பது ஈழத்து இலக்கிய உலகில் திருப்புமுனையாக அமைந்துள்ளது. ஈழத்து எழுத் தாளர்களது நூல்கள் அவை எந்த அணியைச் சேர்ந்தவை களாயிருப்பினும் அமெரிக்க நூலகங்களுக்கு அனுப்பப்படு கின்றன.

ஈழத்தில் வெளியாகும் தமிழ் நூல்கள், தமிழர்களால் வெளியிடப்படும் ஆங்கில நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியனவற்றை ஐக்கிய அமெரிக்க நூலகங்களுக்கு அனுப்பி வைக்கும் பிரதிநிதியாக யாழ். இலக்கிய வட்ட உறுப்பினரும், யாழ். மத்திய கல்லூரி நூலகருமான திரு. கா. மாணிக்க வாசகர் கடந்த இரு தசாப்தமாக செயற்பட்டு வருகின்றார்.

இதுபற்றி அவர் தகவல் தருகையில், நூலின் பிரதியொன்று டில்லியிலுள்ள அமெரிக்க நூலகத்திற்கு முதலில் அனுப்பப் படுமென்றும் அப்பிரதி அவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட் டால் அவ்வெளியீடுபற்றிய விபரம் அனைத்துலக நூற்பட்டிய லொன்றில் வெளியிடப்பட்டு அனைத்துலக நூலகங்களுக்கு வழங்கப்படுவதுடன் பல்வேறு நூலகப்பட்டியல்களிலும் இந் நூல் விபரம் வெளியிடப்படும் எனவும், இதனால் இந்நூலை அமெரிக்காவின் எந்த நூலகத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கும் எனவும், நூலின் குறிப்பிட்ட பக்கங்கள் தேவைப்படின் அவற்றின் படப் பிரதியையும் பெற்றுக்கொள்

லாம் என்றும் தேவைப்படும் பிரதிகளை அவர்கள் எம்மிட மிருந்து விலைக்குப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

எமது எழுத்தாளர்கள், பதிப்பகங்கள் இத்தகைய நற்பயன் தரும் பணிக்கு தமக்கு ஒத்துழைப்புத் தருவதில்லையெனவும் ஆதங்கப்பட்டார்.

எதிர்காலத்திலாவது நமது எழுத்தாளர்கள், பதிப்பகத்தினர் தமது வெளியீடுகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் பிரதியினை திரு. கா. மாணிக்கவாசகருக்கு கிடைக்கக் கூடியதாகச் செய்வது எமக்கு நன்மை பயக்கும்.

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களில் தமிழ் நாட்டவரும் அக்கறை காட்டத் தொடங்கினர். தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட 'அக்கரை இலக்கியம்' எனும் நூல் ஓர் அவசரப் படைப்பேயாயினும் தமிழ் கூறும் நல்லுலகங்களுக் கிடையே இலக்கியப் பரிமாறல்களுக்கு ஒரு பாலமாக அமைந்தது.

1969 ல் கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை எழுதிய தேனுறு கவிதைத் தொகுதியினை யாழ். இலக்கிய வட்டம் வெளியிட்டது. மற்றும் 'பல்கலை' வெளியீடான 'யுகம்' சிறு கதைத் தொகுதி, மதுரகவி இ. நாகராஜன் எழுதிய 'சிறுவர் பாடல்', கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய 'தமிழன் கனவு' என்பனவற்றிற்கு அறிமுக விழாக்களை நடாத்தியது.

இலங்கையர்கோன், சோமசுந்தரப் புலவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், ஆசுகவி வேலுப்பிள்ளை ஆகியோரது நினைவு தினங்களைச் சிறப்பாகக் கொண்டாடுவதன் மூலம் தேசிய இலக்கிய உணர்வுக்கு வழிகோலப்பட்டது. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, கவிஞர் யாழ்ப்பாணன் ஆகியோரது மறைவு குறித்து அனுதாபக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

வட்ட உறுப்பினரான கலாகேசரி ஆ. தம்பித்துரை, சித்திர வித்தியாதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றபோது அன்னாருக்குப் பாராட்டு விழாவும், தமிழகத்திலிருந்து பேராசிரியர் சு. மு. பரமானந்தசிவம், மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் செஞ்சொற் செம்மல் வி. ஸ்ரீ. ஸ்ரீநிவாசன் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்தபோது தேனீர் விருந்தளித்து கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர குடிநல சுகாதார வாரத்தையொட்டி ஈழநாடு நடாத்திய கவிதைப் போட்டியில் காரை. செ. சுந்தரம்பிள்ளை முதலாவது பரிசினைப் பெற்றார். இலங்கை கலைக் கழகம் நடாத்திய நாடக எழுத்துப் போட்டியில் முழு நீள நாடகத்திற்கான முதற்பரிசை செம்பியன் செல்வனும், சாகித்திய மண்டலம் நடாத்திய கவிதை நாடகப் போட்டியில் இரண்டாம் பரிசை மதுரகவி இ. நாகராஜனும் பெற்றனர்.

மூன்றாவது ஆண்டு நிறைவு விழா சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் ஈழத்து இலக்கிய உலகிற்கு ஆக்கபூர்வமான படைப்புக்களை அளித்த சான்றோர்களாகிய மக்கள் கவிமணி மு. இராமலிங்கம், புலவர் கவிமணி சி. சின்னையா அவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். செங்கை ஆழியான் எழுதிய 'ஆச்சி பயணம் போகிறாள்' 'நந்திக் கடல்' ஆகிய நாவல்களை வெளியிட்டு மூன்றாண்டு காலத்தில் பன்னிரண்டு நூல்களை வெளியிட்ட பெருமையைப் பெற்றது.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக ஈழத்துப் பிரபல எழுத்தாளரும், கல்விமானும், மாணிக்கவாசகர் அடிச்சுவடு, புத்தர் அடிச்சுவடு ஆகியவற்றின் ஆசிரியருமான சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டபோது வட்டம் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், "திறமையான புலமைக்கு ஈழம், தமிழகம் என்று வேறுபாடேயில்லை. இதற்கு எங்கும் தன்னிகரில்லாத மதிப்புண்டு என்பதையே இது காட்டுகின்றது. தங்களுக்குக் கிடைத்தஇந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஈழத்து – தமிழக எழுத்தாளர்

விடையே நட்புறவை மேலும் வலுவடையச் செய்வதுடன் ஈழத்து எழுத்தாளர்களின் பெருமையும் புகழும் தமிழகத்தில் மேலும் ஓங்க வழிசெய்வீர்கள் எனவும், நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை முதலான பெருமக்கள் தமிழகத்தில் தம் சேவை மூலம் ஏற்படுத்திய பெருமையை மேலும் நீடிக்க வழி செய்வீர்களெனவும் நம்புகிறோம்'' எனச் செயலாளர் யாழ் வாணனல் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழகத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் அங்குள்ள பதிப்பகங்களினுல் இன்று வெளியிடப்பட்டு தமிழக வாசகர்களிடையே நல்லாதரவையும் பெற்று வருவது எமது எழுத்தாளர்களின் ஆற்றல், புலமை ஆகியவற்றிற்குக்கிடைத்த வெற்றியாகும்.

ஈழநாடு தனது பத்தாவது நிறைவு தின விழாவை யொட்டி நடத்திய காவியப் போட்டியில் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதிய **'சங்கிலியம்'** என்ற காவியம் முதல் பரிசு பெற்றது. இக்காவியம் ஈழநாடு வெளியீடாக வெளிவந்து சாகித்திய மண்டலப் பரிசும் கிடைத்தமை குறிப் பிடத் தக்கது. சிறுகதைப் போட்டியில் செம்பியன் செல்வன் எழுதிய **'பூவும் கனியும்'**, செங்கை ஆழியான் எழுதிய **'கங்கு மட்டை'** ஆகிய கதைகள் முதற்பரிசு பெற்றன. கவிதைப் போட்டியில் வி. கந்தவனம் எழுதிய **'வானம்பாடி'** முதற் பரிசைப் பெற்றது. ஓரங்க நாடகப் போட்டியில் **'விடிய இன்னும் நேரமிருக்கு'** என்ற செம்பியன் செல்வன் எழுதிய நாடகம் முதற்பரிசைப் பெற்றது. செங்கை ஆழியான் எழுதிய **'இரவின் முடிவு'** என்ற நாவல் முதற்பரிசு பெற்றது.

இலங்கை அரசினரால் நடாத்தப்பட்ட காந்தி நூற்றுண்டு விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப் பட்ட காந்தி கீர்த்தனைப் போட்டியில் முதலாவது பரிசைக் கவிஞர் **வே ஐயாத்துரை** பெற்ருர். அவர் இப்பரிசினை பண்டிட் விஜயலட்சுமி அம்மையாரிடமிருந்து பெற்றுக்கொண்

டார். கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை வெளியிட்ட 'தேனூறு' கவிதைத் தொகுதி இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. வடமாகாண ஐக்கிய மேற்பார்வை சபை, சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தினையொட்டி நடத்திய கவிதைப் போட்டியில் 1969ம் ஆண்டு தொடக்கம் 1971ம் ஆண்டு வரையிலான மூன்றாண்டுகளில் கவிஞர் வே. ஐயாத்துரை முதற்பரிசினைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளார்.

1970ம் ஆண்டு யாழ்வாணன் எழுதிய 'அமரத்துவம்' சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழா, யாழ். நகர மண்டபத்தில் நடைபெற்றது, அவ்விழாவில் யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர் சார்பில் 'யாழ் இலச்சினை' பொறித்த மோதிர மொன்றினை மேயர் எஸ். நாகராஜா, யாழ்வாணனுக்கு வழங்கினார்.

யாழ். இலக்கிய வட்ட ஆண்டு விழாவில் செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டார்.

கவிஞர் வி. கந்தவனம் எழுதிய 'கிரிமலையினிலே' மெய்யோ இதுவுன் மேதினிதானோ' என்ற இரண்டு கவிதைத் தொகுதிகள் வெளியிடப்பட்டன.

1971ம் ஆண்டில் மதுரகவி இ. நாகராஜன் எழுதிய 'குயில் வாழ்ந்த கூடு'. பிரபல உருவகக்கதை எழுத்தாளரான 'சு. வே' எழுதிய 'மண் வாசனை', செம்பியன் செல்வன் எழுதிய 'மூன்று முழு நிலவுகள்' ஆகிய நூல்களுக்கு அறிமுகவிழா நடத்தப்பட்டது,

மதுரகவி இ. நாகராஜனின் திடீர் மறைவு யாழ். இலக்கிய வட்டத்திற்குப் பேரிழப்பாகும். அவரது தலைமையில் கவிஞர்கள் வி. கந்தவனம், செ. கதிரேசபிள்ளை, வே. ஐயாத்துரை, காரை செ. சுந்தரம்பிள்ளை, வே. குமாரசாமி ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து பல கவியரங்குகளில் பங்குபற்றி மக்களிடையே இலக்கிய ரசனையை எற்

படுத்தினர். 'சின்ன மேளம்' என்றழைக்கப்பட்ட நடனங்கள் நடைபெற்ற கோவில்களிலெல்லாம் இன்று சமயச் சொற்பொழிவுகளும், கதாப்பிரசங்கங்களும், கவியரங்கமும் முக்கிய இடம் வகிக்கின்றன. அந்த அளவிற்கு மக்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டு விட்டதென்றால் அதற்குக் காரணிகளாக அமைந்தவர்கள் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரேயாவர். நமது சைவாலயங்களைப் பொறுத்தவரை இந்த மாற்றத்தை ஒரு பெரும் மனப் புரட்சியென்றே சொல்ல வேண்டும்.

மதுரகவி இ. நாகராஜன் எழுத்தையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர். அவரது திடீர் மறைவால் அவரது குடும்பம் வறுமையிலே வாடியது. அவர்களுடைய துயர் போக்க யாழ். இலக்கிய வட்டம் அவரது நினைவின் பேரால் நிதியொன்றைச் சேர்த்துக் கொடுத்துதவியது.

யாழ். இலக்கிய வட்டம் தனது எட்டாவது ஆண்டிற்குள் பல கவியரங்குகள், பட்டி மன்றங்கள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றைப் பட்டினத்தில் மாத்திரமல்லாது கிராமப் புறங்களிலு நடாத்தியுள்ளது. இருபது நூல்களை வெளியிட்டும் இலக்கிய இரசனை மிக்க வாசகர்களிடையே நன்மதிப்பைப் பெற்றது. எங்கும் யாழ். இலக்கிய வட்டத்தின் செயற்றிறன் பற்றியே பேச்சாகவிருந்தது.

# 5

"ஈழத்து நூல்களின் விற்பனைகாகப் பிரச்சாரஞ் செய்து விற்பனையைப் பெருக்கி உதவி செய்தல் என்ற இலக்கிய வட்டக் குறிக்கோளில் ஒரு படி முன்னேற்றம் கண்டது. ஈழத்தில் வெளிவரும் தமிழ் நூல்கள் யாவற்றையும் ஒரேயிடத்தில் வாங்க முடியவில்லையென்ற வாசகர்களின் குறையைப் போக்குமுகமாக சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலை

அதிபரின் அனுசரணையுடன் அங்கேயே ஈழத்து நூல்களுக் கென தனிப்பிரிவொன்றை யாழ். இலக்கிய வட்டம் ஏற் படுத்தியது, இப்பிரிவைத் துவக்கி வைத்த வடமாநிலக் கல்வியதிபதி தி. மாணிக்கவாசகர், யாழ். இலக்கிய வட் டத்தின் இப்பெரும்பணியினைப் பாராட்டிப் பேசினார். இது சம்பந்தமாக **'ஒரேயிடத்தில் ஈழத்துத் தமிழ் நூல்கள்'** என்ற துண்டுப்பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டது.

சமூக நலன் பயக்கக்கூடிய நூல்களை யார் வெளியிட் டாலும் வட்டம் அவற்றிற்கு அறிமுகவிழாக்களை நடத்தி யது. வீரகேசரி வெளியீடுகளான பாலமனோகரனின் **'நிலக் கிளி'**, சொக்கனின் **'செல்லும் வழி இருட்டு'** ஆகிய இரண்டு நாவல்களுக்கும், நகைச்சுவை எழுத்தாளர் பொ. சண்முக நாதன் எழுதிய **'இதோ ஒரு நாடகம்'** என்ற நூலுக்கும் அறிமுக விழாக்களை நடத்தியது.

பிரபல எழுத்தாளரும், விமர்சகருமாகிய கலாநிதி க. கைலாசபதி அவர்கள் யாழ்ப்பாண வளாகத்திற்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமயப் பணி யின் வெள்ளி விழாவையும், பிரபல எழுத்தாளரும் கலைஞ ருமாகிய ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களின் இருபத் தைந்து வருடக் கலைச் சேவையைப் பாராட்டி 'கலைப் பேரரசு' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் இம்மூவரையும் யாழ். இலக்கியவட்டம் பாராட்டியது.

1975ம் ஆண்டின் முற்பகுதியில் கவிஞர் வே. ஐயாத் துரை எழுதிய **'வெள்ளைக் கமலம்'** என்ற கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது.

கடந்த ஆண்டுகளைப் போலவே சங்கரீதியாக வட்டம் செய்துள்ள சேவையை விட வட்ட உறுப்பினர்கள் பல சாத னைகளைச் செய்திருக்கிறார்கள். செங்கை ஆழியான் எழுதிய **'பிரளயம்'** என்ற நாவல் வீரகேசரி வெளியீடாக வெளி வந்தது. இந்நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு

கிடைத்தது. இவரது 'வாடைக் காற்று' என்ற நாவல் அதே பெயரில் திரைப்படமாக வெளிவந்தது. இப்படத்தின் திரைக்கதை, வசனத்தைச் செம்பியன் செல்வன் எழுதினாரென்றாலும் படத்தில் அவரது பெயர் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டதாகத் தெரியவருகின்றது. இவரது மற்ற நாவலான 'காட்டாறு' வீரகேசரி வெளியீட்டாளரின் ஐம்பதாவது நாவலாகும். வீரகேசரி ஸ்தாபனத்தாரால் நடாத்தப்பட்ட இந்நாவல் போட்டியில் முதல் பரிசாக 1500/- பரிசு பெற்றதுடன் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றுக்கொண்டது.

1976 ம் ஆண்டு, இரசிகமணி, இலக்கியச் செல்வர் எனப் பலராலும் போற்றி அழைக்கப்பட்ட கனக. செந்திநாதன் அவர்களுடைய மணி விழா குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அச்சமயம் இரசிகமணி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த நேரம்; அவரது கால் ஒன்று கழற்றப்பட்டிருந்தது. இரசிமணியின் பாவனைக்கென முச்சக்காக் கதிரையொன்றை அன்பளிப்புச்செய்திருந்தார் பிரபல எழுத்தாளரான கே. டானியல். இரசிமணிக்கும் அவருக்கும் இலக்கிய கோட்பாடுகளில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவர் இரசிகமணியின் இலக்கிய ரசிகர். நண்பர். எல்லாவற்றிலும் பார்க்க மனிதனை நேசிக்கத் தெரிந்த பண்புள்ளங் கொண்டவர் என்பதனை இந்நிகழ்ச்சி கோடிட்டுக் காட்டியது.

இரசிமணியின் மணிவிழாவில் அவர் எழுதிய நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன. பல எழுத்தாள நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க இரசிகமணி தனது சுய சரிதையை எழுதத்தொடங்கினார். முதலாம் பகுதியை மாத்திரம் எழுதி முடித்துவிட்டார். இரண்டாம் தொகுதியை எழுதமுன் காலன் அவரை எம்மிடமிருந்து கவர்ந்து சென்றுவிட்டான்.

அவரது சுயசரிதையின் முதல் பாகம் 'என் கதை' என்ற தலைப்பில் அவரது மகன் தி. குகானந்தனால் பதிப்பிக்கப்பட்டு 1978 ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

செம்பியன் செல்வன் எழுதிய நெருப்பு மல்லிகை நாவல் வீரகேசரி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான போட்டியில் முதற் பரிசு பெற்றதுடன், மற்றைய பிரதேச நாவல்களுக்குள்ளும் அதி சிறந்ததாகவும் தெரிவுசெய்யப்பட்டது. இவர் இலங்கையின் கலாச்சார அமைச்சின் நாடக மதிப்புரைக் குழுவின் உறுப்பினராக கடமையாற்றித் தற்போது பிரதேச அபிவிருத்தி அமைச்சின் தமிழ் நாடக மதிப்புரைக் குழுவின் செயலாளராக கடமையாற்றுகிறார். இவர் யாழ் இலக்கியவட்டத்தினரின் செய்திமடல் ஆசியர்; அமிர்தகங்கை மாதஇதழ் கௌரவ ஆசிரியர்.

1978ம் ஆண்டு தொடக்கம் 1984 வரை யாழ். இலக்கிய வட்டம் சீராக இயங்கவில்லையாயினும் ஓரளவு செயற்பட்டது.

யாழ். வளாகத் தலைவராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் நியமிக்கப்பட்டதையொட்டி அன்னாருக்குப் பாராட்டு விழாவினை தேனீர் விருந்துபசாரத்தோடு நடாத்தியது.

குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு குழந்தை இலக்கியம் பற்றிய இலக்கியச் சொற்பொழிவுகள் பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலை, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடாத்தப்பட்டது.

எஸ். ஞானசேகரம் எழுதிய 'குருதிமலை' நாவலுக்கான அறிமுக விழா யாழ். வீரசிங்கம் வரவேற்பு மண்டபத்திலும், புலவர் வே கனகசபாபதி எழுதிய 'சாவித்திரி சபதம்' என்ற நூல் வெளியீட்டு விழா நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திலும் நடைபெற்றன.

செங்கை ஆழியான் எழுதிய 'யானை' வரதர் வெளியீடாகவும், 'ஒரு மைய வட்டம்' சென்னை நியூ செஞ்சரி புக்ஹவுஸ்

வெளியீடாகவும் 'அக்கினிக்குஞ்சு' யாழ். இலக்கிய வட்ட வெளியீடாகவும் வெளிவந்துள்ளது.

கவிஞர் வே. குமாரசாமியின் 'சிரமம் குறைகிறது' என்ற கவிதைத் தொகுதி அறிவழகுப் பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது.

இரசிகமணி கனக. செந்திநாதன் நினைவாக முதலாவது குறுநாவல் போட்டியினை மல்லிகை சஞ்சிகையின் அனுசரணையுடன் நடாத்தியது.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாண நகராட்சி மன்றத்திற்கு தனித்துவமான கீதம் ஒன்று இயற்றுவதற்காக நடாத்தப்பட்ட போட்டியில் முதற் பரிசு பெற்றதுடன் யாழ். நகர முதல்வர் இராஜா விசுவநாதன் அவர்களால் பொன்னாடை போர்த்தி, யாழ். இலட்சினை பொறித்த கேடயமும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இவர் 1981ம் ஆண்டில் எம். எட். பரீட்சையிலும், 1983ல் எம். பில். பரீட்சையிலும் சித்தியடைந்து தற்போது கலாநிதிப் பட்டப் படிப்பிற்கு தம்மைப் பதிவு செய்துள்ளார். இவரது தேனாறு, சங்கிலியம் ஆகிய நூல்கள் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றவையாகும்.

இருபதாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள யாழ். இலக்கிய வட்டம் முப்பத்தி நான்கு நூல்களை வெளியிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டிற்கு திரு. சு. சபாரட்ணம்(சசிபாரதி) தலைவராகவும் ஆ. இராஜகோபால் (செம்பியன் செல்வன்), திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் நா. சண்முகநாதன் (யாழ்வாணன்) கவிஞர் வே. குமாரசாமி ஆகியோர் இணைச் செயலாளராகவும் பொருளாளராக க. குணராஜாவும் (செங்கை ஆழியான்) தெரிவு செய்யப்பட்டனர். பதினொரு பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இரசிகமணி கனக. செந்திநாதன் நினைவாக நடாத்தப்பட்ட முதலாவது குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்ற குறுநாவல்பற்றிச் சிலரால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நால்வர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவில் சிற்பி, குறமகள், நா. சுப்பிரமணிய ஐயர், எஸ். பத்மநாதன் ஆகியோர் அடங்குவர்.

அக்குழுவினர் மேற்படி குறுநாவல்பற்றிய குற்றச்சாட்டினை ஆராய்ந்தனர். அக்குழுவின் சார்பில் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் செயற்குழுவிற்கு சமர்ப்பித்த அறிக்கையில்

''பரிசு பெற்ற இராஜமகேந்திரனது '**வெற்றுப் பக்கங்கள்**' சிலர் குறிப்பிட்டதுபோல திருட்டுமல்ல, நகலுமல்ல.

அது ஒரு சுயம்.

அது இந்த மண்ணின் கதை.

எனவே யாழ். இலக்கிய வட்டமும் அதன் நடுவர்களும் தவறு செய்யவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். இலக்கிய வட்டத்தினால் வெளியிடப்பட்ட செய்திமடல் செம்பியன் செல்வன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட பதட்ட – நெருக்கடி நிலை காரணமாகத் தொடர்ந்து வெளிட முடியவில்லை. செய்திமடல் மட்டுமின்றி கதையரங்கம், கவிதையரங்கம் முதலான மாதாந்த நிகழ்ச்சிகள் உட்பட இலக்கிய கர்த்தாக்களான செங்கை ஆழியான், சி. மௌனகுரு, காரை. செ. சுந்தரம்பிள்ளை ஆகியோருக்கு நடாந்தவிருந்த பாராட்டு விருந்து வைபவமும் இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

இரசிகமணி கனக. செந்திநாதன் நினைவாக இரண்டாவது குறுநாவல் போட்டி ஈழநாடு வாரமலரின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

யாழ். இலக்கிய வட்டம், தனது இலக்கிய முயற்சிகளை நாடளாவிய ரீதியில் பன்முகப்படுத்தும் நோக்கமாக

இலங்கை இலக்கியப் பேரவை யென்ற பெயரில் இலக்கியச செயற் திட்ட அமைப்பொன்றினை அமைத்தது. இவ்வமைப் பிற்கு யாழ். இலக்கிய வட்ட செயற்குழுவே பொறுப்பாக விருக்கும். இவ்வமைப்பின் அமைப்புச் செயலாளராக செங்கை ஆழியான் நியமிக்கப்பட்டார்.

யாழ். இலக்கிய வட்ட இணைச் செயலாளராகிய கவி ஞர் கல்வயல் வே. குமாரசாமி எழுதிய 'பாப்பாப்பா' கவிதை நூல் அறிமுகவிழா 9-10-84ல் யாழ். திறந்த வெளி அரங்க சதுக்கத்தில் நடாத்தப்பட்டது.

27-10-84ல் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் பிரபல எழுத்தாளர் சொக்கன் எழுதிய '**தமிழ்ப் பேரன்பர் வித்து வான் க. வேந்தனார்**' என்ற நூலும் வெளியிடப்பட்டது.

6-3-85ல் ஈழநாடு நிறுவனமும், யாழ். இலக்கிய வட் டமும் இணைந்து நடாத்திய இலக்கிய அரங்கு ஈழநாடு அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்வரங்கில் செங்கை ஆழியான் எழுதி ஈழநாடு வெளி யீடாக வெளிவந்த '**கடற்கோட்டை**' சரித்திர நாவல் வெளி யீடும் இரசிகமணி கனக. செந்திநாதன் இரண்டாவது நினைவுக் குறு நாவல் பரிசளிப்பு விழாவும் சிறப்பாக நடை பெற்றன.

31-3-85ல், யாழ். அமலமரித் தியாக சபையினரால் திங்கள் வெளியீடாக வெளியிடப்படும் '**நான்**' உளவியல் சஞ்சிகைக் குழுவினரும், யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து நடாத்திய கருத்தரங்கு யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெற்றது.

இவ்வாண்டு இரசிகமணி கனக. செந்திநாதன் நினை வாக மூன்றாவது முறையாக குறுநாவல் போட்டினை '**ஈழ முரசு வாரமலர்**' அனுசரணையுடன் நடாத்துகின்றது. அப் போட்டிக்கு ரூபா 1000/-மும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன் முன்னுள் தலைவரான மதுரகவி இ. நாகராஜன் நினைவாக குழந்தைப் பாடல் போட்டியினையும், 'ஈழநாடு வாரமலர்' அனுசரணையுடன் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு செம்பியன் செல்வன் எழுதிய 'நாணலின் கீதை', கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை எழுதிய 'அரங்கு கண்ட துணைவேந்தர்', கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி எழுதிய 'பாப்பாப்பா', திருமதி கோகிலா மகேந்திரன் எழுதிய 'அறிமுக விழா', செங்கை ஆழியான் எழுதிய 'நடந்தாய் வாழி வழுக்கியாறு', 'இடுகு வேலி', 'ஓ அந்தப் பழைய உலகம்', 'கடல் கோட்டை' ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

23–2–86 ல் 'இன்றைய இலக்கியம்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளரும், ஈழத்தின் மூத்த கவிஞருமான கவிஞர் இ. முருகையன் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

28–3–86 ல் கோப்பாய் ப. சிவம் எழுதிய வெள்ளோட்டம் என்ற குறுநாவல் தொகுதியின் வெளியீட்டு விழாவினை நல்லூர் இந்து விடுதியில் நடாத்தியது.

இவ்விழாவினை யாழ்ப்பாண மாநகர ஆணையாளரும், இலக்கிய ஆர்வலருமான சி. வி. கே. சிவஞானம் தொடக்கி வைத்தார்.

யாழ். பொதுசன நூலகத்திற்கென எமது எழுத்தாளர்கள் வெளியிடும் நூல்களை வாங்கிவைக்க வேண்டுமென, யாழ். மாநகர ஆணையாளரும், இலக்கிய ஆர்வலருமான திரு. சி. வி. கே. சிவஞானம் அவர்களைப் பேட்டி கண்டபோது அவர், எழுத்தாளர்கள் வெளியிடும் நூல்களில் பத்துப் பிரதிகளும், சஞ்சிகைகளில் ஐந்து பிரதிகளும் வாங்கி வைப்பதாக உறுதியளித்துள்ளார். நூல்களை வெளியிடும் எழுத்தாள நண்பர்கள் தங்கள் வெளியீடுகளை நேரடியாக ஆணையாளரிடமோ, நூலகரிடமோ கையளிக்கலாம்.

19–4–86 சனிக்கிழமை பிற்பகல் நல்லூர் இந்து விடுதியில் **யாழ். இலக்கிய வட்ட இருபதாவது ஆண்டு நிறைவு விழா இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசளிப்பு விழா** ஆகியன சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்வாணன் எழுதிய **'யாழ். இலக்கிய வட்டம் இரு தசாப்தங்கள்; சில நினைவுகள்'**, கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி எழுதிய **'மரணத்தின் நனவுகள்'** ஆகிய நூல்கள் வெளியிடப்படும். அத்துடன் பண்டிதர் **செ. கதிரேசபிள்ளை,** கவிஞர் **வே. ஐயாத்துரை** ஆகியோர் கௌரவிக்கப் படவுள்ளனர்.

யாழ். இலக்கிய வட்டத்தின் செயற்றிட்ட அமைப்பான இலங்கை இலக்கிய பேரவையின் முதலாவது (1984ம் ஆண்டிற்கான) பரிசுகள் பின்வருவோருக்கு வழங்கப்படவுள்ளது.

1. **பேராசிரியர் சு. வித்தியானந்தன்**
   (உப வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
   நூல் : **தமிழர் சால்பு** — கட்டுரை

2. **செங்கை ஆழியான்**
   நூல் : **காட்டாறு** — நாவல்

3. **செம்பியன் செல்வன்**
   நூல் : **மூன்று முழு நிலவுகள்** — நாடகம்

4. **நீலாவணன்**
   நூல் ; **வழி** — கவிதை

5. **திரு. செ. கதிர்காமநாதன்**
   நூல் : **கொட்டும் பனி** — சிறுகதை

6. **மஹாகவி**
   நூல்: **ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்** – காவியம்

7. (அ) பா. சத்தியசீலன்

நூல் : பாட்டு — சிறுவர் இலக்கியம்

(ஆ) த. துரைசிங்கம்

நூல் : பாலர் பாடல் — சிறுவர் இலக்கியம்

யாழ். இலக்கிய வட்ட உறுப்பினர்கள் ஆற்றல் மிக்கவர்கள். கனகாத்திரமானவர்கள், பழமையிலே காலூன்றிப் புதுமையை வரவேற்பவர்கள். பண்டிதர்கள் செ. கதிரேச பிள்ளை, ந. சச்சிதானந்தன் முதல் மறுமலர்ச்சிச் சங்க உறுப்பினர்களான சொக்கன், வரதர், சு. இராஜநாயகன் ஆகியவர்களையும் கலைச்செல்வி, ஈழகேசரி ஆகிய பத்திரிகைப் பண்ணைகளில் வளர்ந்த இலக்கிய ஆற்றல் மிக்க துடிப்புள்ள இளைஞர்களையும் சம்பந்தன் போன்ற சிறுகதை முன்னோடிகளையும் உறுப்பினர்களாகக் கொண்ட இயக்கம் யாழ். இலக்கிய வட்டம். வெறும் பேச்சளவில் மாத்திரம் காலத்தைக் கடத்தாது செயலளவில் செயற்படுபவர்கள். கடந்த இருபது ஆண்டுகளில் முப்பத்திருன்கு நூல்களை யாழ் இலக்துய வட்டம் வெளியிட்டுள்ளது.

இருபத்தோராவது ஆண்டை நோக்கி அடியெடுத்து வைத்துள்ள யாழ் இலக்கிய வட்டம், இரசிகமணி கனக. செந்திநாதன் அடிச்சுவட்டிலே, ஆக்கபூர்வமான — ஆரோக்கியமான — சமூக நலன் பயக்கக்கூடிய இலக்கியங்களைப் படைக்க வழி வகுக்கும்.

காலத்தோடொட்டிய கருத்தை வலியுறுத்தி எதிர்காலச் சந்ததிக்கு இலக்கியமாக நம்மவர் ஆக்கங்கள் அமைதல் வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் யாழ். இலக்கிய வட்டம் தொடர்ந்தும் செயலாற்ற வேண்டியுள்ளது.

எழுத்தாளர்களிடையே ஏற்படும் ஒற்றுமையும், அரசியற் கொள்கை முரண்பாட்டைத் தாண்டிய இலக்கிய நோக்கமுமே இன்று வேண்டற்பாலது.

நமது நாட்டிற்கேற்ற தனிவழியுடன் பொதுவாக தமிழ் வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு செயற்பட எழுத்தாளர்களைத் தூண்டுவதும் யாழ். இலக்கிய வட்டத்தின் குறிக்கோளாகும்.

ஈழத்து இலக்கிய உலகில் விழிப்புணர்வும் ஆர்வமும் மென்மேலும் ஏற்பட எமது இருபதாவது நிறைவு விழா வழி அமைக்கும் என எதிர்பார்ப்போமாக.

யாழ். இலக்கிய வட்டத்தின் தனித்துவ சேவை

வாழ்க! வளர்க!

# ஜோஸ்யர்

சோதிட பத்திரிகை

222/4, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். இலக்கிய வட்டம்

வளர்க.

# மக்மில்லன் புத்தகசாலை

பஸ் நிலையம், — யாழ்ப்பாணம்.

## சந்திராஸ்

உள்ளூர் பாதணிகள் உற்பத்திகள்
விற்பனையாளர்

62, 63 நவீன சந்தை. — யாழ்ப்பாணம்.



- சிந்தெட்டிக் புடவைகள்,
- றெடிமேட் உடுப்புக்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- பாட்டா பாதணிகள்

## யாழ் சென்றல் றேடஸ்

11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



கைக்கடிகாரம், மேசை மணிக்கூடு, சுவர்க்கடிகாரம்,
எலக்ட்ரோனிக் வாட்சுகள்,
திருத்துவதில் பிரசித்திபெற்றவர்கள்.

## சிவா வாட்ச் வேக்ஸ்

185, நவீன சந்தை, — யாழ்ப்பாணம்.



யாழ்வாணனின் இலக்கிய முயற்சிகளுக்கு
வாழ்த்துக்களுடன்

இலக்கிய மாத இதழ்

## அமிர்த கங்கை

140, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

For your electrical requirements

## Veco Electrical

Electrical Contractors,

4, Stanley Road,
JAFFNA.

யாழ். இலக்கிய வட்டத்தின்
அரிய பணிகள் வளர வாழ்த்துகின்றோம்.

## M. T. Ponnampalam

Tiles Merchant

36, (84) K. K. S. Road,
JAFFNA.

உங்கள் இலக்கியப் பணி

பல்லாண்டு பல்கிப் பெருக.

வாழ்த்துகின்றோம்.

# பவானி விலாஸ்

உரிமையாளர் : S. தனராஜ்

நீராவியடி, — யாழ்ப்பாணம்.



# ANESKO

QUALIFIED OPTICIANS

570, Hospital Road,
JAFFNA.

Telephone : 22616

**Head Office :**

12, Main Street,
JAFFNA.

Telephone : 23478

உங்கள் விற்பனைப் பொருட்களை

கவர்ச்சியுடன் விளம்பரப்படுத்த

தொடர்புகொள்ளுங்கள்!

வியாபாரத்துறையில்

பலகால அனுபவம் பெற்றவர்கள்

# ஜோ. எகட்டன்

## செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வட்டைசிங் சிஸ்டம்ஸ்

யாழ்நகர்.

இருபதாவது நிறைவு விழாக்காணும்
யாழ். இலக்கிய வட்டத்தின் பணி
சிறக்க வாழ்த்துகின்றோம்.

○★○

# திருப்பதி ஸ்ரோர்ஸ்

51, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23881 — 23119

புதிய டிசைன்

- சேலை வகைகள்
- (B)பிளவ்ஸ் துணிகள்
- சேட்டிங் — சூட்டிங்
- பஞ்சாப் சர்வாணி சூட்

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரைக்கும்
தேவையான
ரெடிமேட் உடைகளை
தெரிவுசெய்வதற்கு சிறந்த ஸ்தாபனம்

# துர்க்கா ரெக்ஸ்ற்

164, நவீன சந்தை (உட்பக்கம்)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 22704

யாழ். இலக்கிய வட்டத்தின் சேவை

பல்கிப்பெருக வாழ்த்துகிறோம்.

எஸ். வி. முருகேசு

154, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 22564

வளர்ச்சியில் உயர்ச்சி பெற்று
20 வது ஆண்டு நிறைவைக் காணும்
யாழ் இலக்கிய வட்டத்தின்
சகாப்தங்கள் சரித்திரம் படைக்க
நாம் வாழ்த்துகின்றோம்.

**'மணி ஓசை' அச்சகம்**

யாழ்ப்பாணம்.

யாழ். இலக்கிய வட்டத்தின் வளர்ச்சி மென்மேலும் வளர
வாழ்த்துகிறோம்!

''நான்'' வெளியீட்டு வரிசையில்
அடுத்து வருவது

— செம்பியன் செல்வனின் —

**குறுங்கதை : நூறு**

''உடற் பசிக்கு உணவுண்டு;
உள்ளக் குறை தீர்க்க நான் உண்டு''

இலக்கிய வட்டத்தின்
இலக்கியப்பணி
இனிதே தொடர
வாழ்த்துகின்றோம்,

யாழ். மாநகரசபை
ஊழியர் கூட்டுறவு கடனுதவிச் சங்கம்
யாழ்ப்பாணம்.

ஈழத்து இலக்கிய உலகில் **யாழ்வாணன்** என்ற பெயர் நன்கு புகழ் பெற்றது. நகரமண்டபக் காப்பாளராக அவர் கடமை யாற்றும் யாழ்ப் பாண மாநகரசபை அலுவல கத்திற் கூட நா. சண்முகநா தனிலும் பார்க்க யாழ்வா ணனே முக்கிய மானவர்.



யாழ் இலக்கிய வட்டத் தை உருவாக்கியவர் களுள் யாழ்வாணனும் ஒருவர். தொடக்க காலத்திலிருந்தே அதன் செயலாளருள் ஒருவரா கப் பணிபுரிந்தும் வருகின்றார். அவர், யாழ். இலக்கிய வட் டத்தின் வளர்ச்சிக்கான கார ணங்களுள் அவரது அயராத அடக்கமான உழைப்பு மிக வும் முக்கியமானதொன்று.

கங்கை பல கிளைகளாகப் பிரிந்து கடலிற் கலக்கின்றது. யாழ்வாணன் என்கின்ற ஆற்றல் ஆறும் பல கிளைகளாகப் பாய்ந்து புகழிற் களித்து வருகின்றது. நண்பர் யாழ்வாணன் அவர்கள் சுகாதாரப் பகுதியினரால் வெளியிடப்படும் 'சுகா தார ஒலி' என்ற பத்திரிகையின் ஆசிரியர். யாழ் மாநகர சபை ஊழியர் கூட்டுறவுக் கடனுதவிச் சிக்கனச் சங்கத்தின் தலைவர். 1968 - ஆம் ஆண்டு நடை பெற்ற சுகாதார-குடிநல வார விழாக் குழுவின் செயலாளராகக் கடமையாற் றிய துடன் 'எழில்மிகு யாழ்ப்பாணம்' என்ற வாடாமல ரையும் வெளியிட்டு அறிஞர் பெருமக்களின் பாராட்டுதல் களையும் அவர் பெற்றுள்ளார். 'அண்ணா அஞ்சலி' அவரது மற்றுமோர் தொகுப்பு நூலாகும்.

சிறந்த சிறுகதையாசிரியராகிய யாழ்வாணன் பல பரி சில்களைப் பெற்ற எழுத்தாளர். பரந்த சமூக சேவையாள ராகிய யாழ்வாணன் நிறைந்த நல்லியல்புகளைக் கொண்ட பண்பாளர். அவர் ஆயிரத்தில் ஒருவர்.

—**வி. கந்தவனம்**